

சென்னையில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் காலை உணவுத் திட்டம் விரிவாக்கத்தினை தொடங்கி வைத்ததைத் தொடர்ந்து அருப்புக்கோட்டையில் மாவட்ட ஆட்சியர் மரு.என்.ஓ.சுகபுத்ரா தலைமையில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் தொடங்கி வைத்தார்.



சிவகங்கை மாவட்டம் சிவகங்கை மன்னர் நடுநிலைப் பள்ளியில் முதல்வரின் காலை உணவுத் திட்டம் விரிவாக்கத்தினை கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் துவக்கி வைத்து மாணவ, மாணவிகளுடன் காலை உணவு அருந்தினார்.




கழக தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவுறுத்தலின்படி திருச்செந்தூர் தொகுதி ஆத்தூர் சண்முகசுந்தர நாடார் தொடக்கப்பள்ளியில், அரசு உதவி பெறும் பள்ளிகளில் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் தொடங்கி வைக்கும் நிகழ்ச்சியில், மீன் வளம் – மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அமைச்சர் அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், மாநில வர்த்தக அணி இணைச் செயலாளர் எஸ். ஆர்.எஸ்.உமரி சங்கர், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் பை.மூ.ராமஜெயம், மாவட்ட ஆட்சியர் இளம்பகவத், ஒன்றியச் செயலாளர் ஏ.பி.ரமேஷ் மற்றும் கழக நிர்வாகிகள், அரசு அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர்.



முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் விரிவாக்கம் திட்டத்தின் கீழ் திண்டுக்கல் அரசு உதவி பெறும் தொடக்கப் பள்ளியான சிசிலியாசில் மாவட்ட ஆட்சித் தலைவர் சரவணன் திண்டுக்கல் கிழக்கு மாவட்டச் செயலாளர் , பழனி சட்டமன்ற உறுப்பினர் இ.பெ. செந்தில்குமார் ஆகியோர் தொடக்கி வைத்தனர். உடன் மாநகரச் செயலாளர் ராஜப்பா, மேயர் இளமதி ஜோதி பிரகாஷ் மற்றும் அரசு அலுவலர்கள், பள்ளி ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.




முதலமைச்சர் அவர்களின் காலை உணவுத் திட்ட விரிவாக்கம் நேற்று (26.08.2025)முதல் அரசு உதவி பெறும் பள்ளிகளில் துவங்கியது. அதன்படி தென்காசி தெற்கு மாவட்டம் சுரண்டை நகராட்சிக்குட்பட்ட ஜவகர்லால் நடுநிலைப்பள்ளியில் காலை உணவுத் திட்டத்தை தென்காசி தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் வே.ஜெயபாலன், தென்காசி சட்டமன்ற உறுப்பினர் பழனிநாடார் ஆகியோர் துவக்கி வைத்தனர்.நிகழ்வில் நகர் மன்ற தலைவர் வள்ளிமுருகன் நகராட்சி ஆணையர் ராமதிலகம், வர்த்தக அணி அமைப்பாளர் முத்துக்குமார்,மற்றும் பூல்பாண்டியன், சுப்பமணியன், சசிகுமார், அருணா, மோகன்,முத்து சுப்பிரமணியன், பிரேம்குமார்,வைரமுத்து,செந்தில், ராஜா,நகர்மன்ற உறுப்பினர்கள், தி.மு.க,காங்கிரஸ் கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



சென்னையில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் காலை உணவுத் திட்டம் விரிவாக்கத்தினை தொடங்கி வைத்ததைத் தொடர்ந்து காரியாபட்டியில் நிதி சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு தொடங்கி வைத்தார்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் அவர்கள், பஞ்சாப் மாநில முதலமைச்சர் பகவந்த் மான் அவர்கள், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆகியோர் முன்னிலையில் சென்னையிலிருந்து நகரப் பகுதிகளில் உள்ள அரசு உதவி பெறும் பள்ளிகளுக்கு "முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்" விரிவாக்கத்தை தொடங்கி வைத்ததைத் தொடர்ந்து வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி மதுரை மாவட்டம், மேலூர் வட்டம், அல் அமீன் உருது தமிழ் துவக்கப் பள்ளியில் அத்திட்டத்தைத் தொடங்கி வைத்து மாணவர்களுக்கு காலை உணவு வழங்கி, அவர்களுடன் அமர்ந்து உணவருந்தினார். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் பிரவீன் குமார், நகராட்சி தலைவர் முகமது யாசின் மற்றும் கழக நிர்வாகிகள், கழகத்தினர், அதிகாரிகள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.



தேனி தெற்கு மாவட்டம் சின்னமனூர் நகரப் பகுதியில் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் விரிவுபடுத்தப்பட்டு சின்னமனூர் கே.வி.ஏ. துவக்கப் பள்ளியில் தேனி தெற்கு மாவட்டச் செயலாளர் கம்பம் ராமகிருஷ்ணன் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார். உடன் நகர மன்ற தலைவர் அய்யம்மாள் நகர செயலாளர் நகராட்சி துணைத் தலைவர் முத்துக்குமார், மாவட்ட துணைச் செயலாளர் வேப்பம்பட்டி செந்தில், பொதுக்குழு உறுப்பினர் தக்காளி ஹக்கீம், நகராட்சி கமிஷனர் கோபிநாத் மற்றும் கழக முன்னோடிகள் அரசு அதிகாரிகள் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நகர்ப்புற பகுதியில் உள்ள அரசு உதவி பெறும் பள்ளிகளில் காலை உணவு வழங்கும் திட்டம் விரிவுபடுத்தி துவக்கி வைத்ததையொட்டி, இராமநாதபுரத்தில் நேற்று புனித சூசையப்பர் தொடக்கப்பள்ளியில் காலை உணவு வழங்கும் திட்டத்தில் இராமநாதபுரம் மாவட்டக் கழகச் செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் காதர் பாட்ஷா முத்துராமலிங்கம் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் சிம்ரன்ஜீத் சிங் காலோன், குழந்தைகளுக்கு உணவு வழங்கி பங்கேற்றார்கள்.



தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நகர்ப்புற பகுதியில் உள்ள அரசு உதவி பெறும் பள்ளிகளில் காலை உணவு வழங்கும் திட்டம் விரிவுபடுத்தி துவக்கி வைத்ததையொட்டி, நேற்று பரமக்குடியில் உள்ள ஆயிர வைசிய துவக்கப் பள்ளியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பங்கேற்று மாணவர்களுக்கு உணவு வழங்கினார். உடன் நகர் மன்ற தலைவர் சேது கருணாநிதி, நகர்மன்றத் துணைத் தலைவர் குணா மற்றும் நகர் செயலாளர் ஜீவரத்தினம் உட்பட கட்சி நிர்வாகிகள் ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.